"மழைநீர் சேமிப்போம்" பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் "

நகராட்சி அலுவலகம்,
தேனி – அல்லிநகரம் ,
நாள் : 29.09.2020.

**<u>நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்</u>**

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 சார்வரி வருடம், புரட்டாசி மாதம் 13-ம் நாள் 29.09.2020-ம் தேதி திங்கள் கிழமை காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற அவசரக் கூட்டம் நடைபெறும்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி – அல்லிநகரம் நகராட்சி

**<u>பொருள் 01 :</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சி கீழ்கண்ட குத்தகை இனங்கள் குத்தகைதாரர்களால் தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து ஒப்படைப்பு செய்யும் காலம் வரையிலான குத்தகை தொகை செலுத்தப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | காலம் |
|---|---|---|---|
| 1 | 125/2005018 | காமராஜர் பேருந்து முனைய தங்கும் விடுதி கீழ் மேற்கு பக்க கடை எண்:3 | 30-11-2020 முதல் |

மேற்கண்ட குத்தகை கடையினை நகராட்சி வசம் கையகப்படுத்திடவும், மேலும் புதிதாக பொது ஏலம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஏலம் கோரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1527
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 02 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி குத்தகை இனங்களுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மாவட்ட அளவிலான தமிழ் நாளிழதலில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்க்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | பட்டியல் எண் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தமிழக நியூஸ், | எண்: 910 நாள்: 29-08-2020 | செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி. வெளியீட்டு ஆணை எண்: 95 / ஒப்ந்தப்புள்ளி / விளம்பரம் / 2020 நாள்: 28-08-2020. | ரூ: 49,200/- |

மேற்கண்ட தொகை ரூ:49,200/- (ரூபாய்: நாற்பத்து ஒன்பது ஆயிரத்து இருநூறு மட்டும்) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 24 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1528
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 03 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி கீழ்கண்ட குத்தகை இனங்கள் குத்தகைதாரர்களால் தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து ஒப்படைப்பு செய்யும் காலம் வரையிலான குத்தகை தொகை செலுத்தப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | காலம் |
|---|---|---|---|
| 1 | 125/2017013 | காமராஜர் பேருந்து முனைய தெற்கு பக்க கடை எண் : 2 | 31-12-2020 முதல் |

மேற்கண்ட குத்தகை கடையினை நகராட்சி வசம் கையகப்படுத்திடவும், மேலும் புதிதாக பொது ஏலம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1529
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 04 :

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்கு சந்தை வடக்கு பக்க கடை எண் : 4 (வரிவிதிப்பு எண் : 125/2005072) திரு.நாகரத்தினம் என்ற பெயரில் உள்ளது. மேற்கண்ட கடையில் திரு.R.நாகரத்தினம் த/பெ. ராமையா நாடார் மற்றும் திரு.S.பெருமாள் த/பெ. சுருளியாண்டி இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், திரு.R.நாகரத்தினம் என்பவர் குடும்ப சூழ்நிலை காரணமாக வெளியூர் செல்வதால் கூட்டுத் தொழிலிருந்து விலகிக் கொள்வதாக கூட்டு வியாபார விலகல் பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட கோரி திரு.S.பெருமாள் என்பவரால் உரிய கட்டணம் செலுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்: 92 நாள்: 03-07-2007-ன் படி மேற்கு சந்தை வடக்கு பக்க கடை எண் : 4 (வரிவிதிப்பு எண் : 125/2005072) திரு.R.நாகரத்தினம் என்பவர் பெயரிலிருந்து திரு.S.பெருமாள் என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 2155/ 2020 / அ3**

**தீர்மான எண்:** 1530
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 05 :

கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழக அரசின் உத்தரவின்படி தமிழ்நாடு முழுவதும் 24-03-2020 முதல் 31-05-2020 ஊரடங்கு அமலில் இருந்ததன் காரணமாக நகர் பகுதியில் உள்ள அனைத்து வணிக நிறுவனங்களும் முழுமையாக மூடப்பட்டிருந்தாலும், மேலும் பேருந்து போக்குவரத்து முடக்கப்பட்டிருந்ததன் காரணமாகவும் நகராட்சி குத்தகை இனங்களின் கீழ் அனைத்து கடைகள் மற்றும் ஆண்டு குத்தகை இனங்களுக்கான 01-04-2020 முதல் 31-05-2020 வரையிலான குத்தகை தொகையினை முழுமையாக ரத்து செய்திட உத்தரவிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்

துறை அரசாணை G.O. (D) No. 298 நாள்: 02-09-2020 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :**

அ) மன்றம் பர்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1531
**தீர்மானம்** : பதிவு செய்யப்பட்டது

## <u>பொருள் 06 :</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்குச் சொந்தமான பழைய யூனியன் ஆபிஸ் சாலையிலுள்ள சுகாதார ஆய்வாளர் 2-க்கான கட்டிடம் பழுதடைந்த நிலையில் மோசமான நிலையில் இருப்பதால் அக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதியதாக கட்டிடம் கட்டும் பொருட்டு அக்கட்டித்தினை இடித்த வகையில் மேற்படி கட்டிடத்தில் இருந்து அகற்றப்பட்ட இருப்பு கேட் ( Grill Gates ) மற்றும் மரக்கதவுகள் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் அதனை ஏலநிபந்தனைகளுக்கு உட்பட்டு கழிவு செய்வதற்கு 22.09.2020-ம் தேதியன்று ஏலம் நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் இரண்டு ஏலதாரார்கள் கலந்து கொண்டு கேட்கப்பட்டுள்ள ஏலகேள்விகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் | ஏலக்கேள்வி தொகை ( ரூ ) | உயர்ந்த பட்ச ஏலக் கேள்வி விபரம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.ஜி.ஸ்டாலின்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 5000 | அதிகம் |
| 2 | திருமதி.எஸ்.சிட்டு,<br>நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 4700 | குறைவு |

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

அ) வ.எண் 1 ல் குறிப்பிட்டுள்ள ஏலக்கேள்வியானது உயர்ந்த பட்ச கேள்வியாக இருப்பதால் திரு.ஜி.ஸ்டாலின், என்பவரின் ஏலக்கேள்வி தொகை தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 835 / 2020 / இ1**

**தீர்மான எண்:** 1532
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 07 :

இந்நகராட்சி எல்லையில் உள்ள பள்ளி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கப்பட்டதை எதிர்த்து நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட டபுள்யு.பி. 13936 / 2020 மேல்முறையீடு வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராவதற்கு உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.கே.ஹேமகார்த்திகேயன் அவர்களிடமிருந்து வரப்பெற்ற வழக்கறிஞர் கட்டணமாக ரூ10,000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம்கருதி நகர்மன்ற தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1175 / 2018 /அ1

**தீர்மான எண்:** 1533
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு 1 ) மற்றும் 2 ) அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 08 :

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அல்லிநகரம் பேருந்து நிறுத்தம் பழுதடைந்த நிலையில் மோசமான நிலையில் இருப்பதால் அக்கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதியதாக கட்டிடம் கட்டும் பொருட்டு, மேற்படி கட்டிடத்தில் இருந்து அகற்றப்பட்ட இரும்பு பொருட்கள் எடை 178 கிலோ மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் அதனை கழிவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1842 / 2020 / இ1**

**தீர்மான எண்:** 1534
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 09 :

தேனி–அல்லிநகரம் நகராட்சிப் பகுதிக்குள் பெரிய அளவில் நகராட்சி சார்பில் பூங்கா ஏற்படுத்தக்கூடிய இடம் இல்லாத காரணத்தினால் இதுவரை நகராட்சி மூலம் சிறப்பான முறையில்

பூங்கா ஏற்படுத்தப்படவில்லை, நகரில் நகராட்சிக்குச் சொந்தமான இடமும் இல்லை. ஆதலால், இந்நகராட்சி எல்லைக்குள்ளும், புதிய பேருந்து நிலையம் மாவட்ட ஆட்சியர் வளாகம் மற்றும் மாஸ்டர் பிளான் காம்ப்ளக்ஸ் ஆகிய பகுதிகளுக்கு மிக அருகிலுள்ள அரசுக்கு சொந்தமான வார்டு எண்—F, பிளாக் எண்—6, நகரளவு எண்—1 என்ற இடத்தில் 4.18 ஏக்கர் நிலம் தீர்வை ஏற்பட்ட சர்கார் தரிசு என்ற இடம் காலியிடமாக உள்ளது.

மேற்கண்ட இடத்தின் தெற்கு பகுதியில் 1.70 ஏக்கர் இடத்தில் 1.20 ஏக்கரில் பசுமைப் பூங்காவினை ஏற்படுத்தியும், 0.50 ஏக்கரில் நகராட்சிக்கு சொந்தமான லாரிகள் மற்றும் இதர வாகனங்கள் நிறுத்திக் கொள்ளவும் அத்துடன் குடிநீர் குழாய் பைப்புகள் போன்ற தளவாட சாமான்கள் சேமித்து வைக்கும் இடம் தகுதியான இடமாக உள்ளது. ஆதலால் நகராட்சிப் பகுதியில் நகராட்சிக்குச் சொந்தமான இடம் ஏதும் இல்லை என்பதால் மேற்படி இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்கண்ட இடத்தில் நகராட்சி மூலம் 1.20 ஏக்கரில் பசுமை பூங்கா அமைக்கவும். 0.50 ஏக்கர் இடத்தில் நகராட்சிக்குச் சொந்தமான வண்டி வாகனங்கள் நிறுத்திக் கொள்ளவும், மற்றும் குடிநீர் பிரிவுக்குத் தேவையான தளவாடச் சாமான்கள் சேகரித்து வைத்துக் கொள்ளும் இடமாக பயன்படுத்திக் கொள்ள மேற்கண்ட இரு இடங்களையும் சேவைத் துறையான நகராட்சி நிர்வாகத்துறைக்கு இலவசமாக வழங்கக் கோரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு உரிய கருத்துரு அனுப்ப மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :-

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 2198 / 2020 /எப்—1

**தீர்மான எண்:** 1535
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 10 :

தேனி — அல்லிநகரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள 31 எண்ணம் ஏர்கண்டிஸ்னர்கள் மற்றும் UPS யூனிட்கள் ஆகியவைகளை 18.10.2020 முதல் மேலும் ஒரு ஆண்டுகளுக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மூலம் பணிகள் மேற்கொள்ளுவதற்கு உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**ந.க.எண். 2334 / 2020 / இ1**

**தீர்மான எண்:** 1536
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு 1 ) மற்றும் 2) அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 11 :</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 9-ல் உள்ள அண்ணா நகர் கிழக்கு பகுதியில் உள்ள கழிவுநீர் ஓடையில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு பொதுமக்களின் சுகாதார நலன் கருதியும், போக்குவரத்து நலன் கருதி ஓடையின் மேல் மூடு சிலாபாக, ஆர்.சி.சி சிலாப் அமைக்கப்பட்டுள்ளளது.

தற்போது மேற்படி சிலாப் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறுகளாக உள்ளது. எனவே மேற்படி பகுதியில் புதியதாக ஆர்.சி.சி சிலாப் மற்றும் கிரில் அமைப்புகள் அமைக்கப்பட வேண்டிய சூழ்நிலை இருப்பதால் அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 7.25/- இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**ந.க.எண். 2335 / 2020 / இ1**

**தீர்மான எண்:** 1537
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 12 :</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 9-ல் உள்ள அண்ணா நகர் மேற்கு பகுதியில் உள்ள கழிவுநீர் ஓடையில் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு பொதுமக்களின் சுகாதார நலன் கருதியும், போக்குவரத்து நலன் கருதி ஓடையின் மேல் மூடு சிலாபாக, ஆர்.சி.சி சிலாப் அமைக்கப்பட்டுள்ளளது.

தற்போது மேற்படி சிலாப் பழுதடைந்துள்ள நிலையில் உள்ளதால் பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறுகளாக உள்ளது. எனவே மேற்படி பகுதியில் புதியதாக ஆர்.சி.சி சிலாப் மற்றும் கிரில் அமைப்புகள் அமைக்கப்பட வேண்டிய சூழ்நிலை இருப்பதால் அதற்கான உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 7.25/- இலட்சம் ஆகும். மேற்படி செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்..

**ந.க.எண். 2337 / 2020 / இ1**

**தீர்மான எண்:** 1538

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 13 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி **கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய அடித்தளப்பகுதி செகண்டரி பிளாக் கடை எண்: 51** குத்தகை விடுவதற்கு 25-09-2020 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்.** | **பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி** | **உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு)** | **ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு)** |
|---|---|---|---|
| 1 | திருமதி.S.நிரஞ்சனா,<br>க/பெ. சரவண பிரேம்,<br>8, ஜெய்ராம் நகர்,<br>பழனிச்செட்டிபட்டி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு **ரூ:4,800/-** |
| 2 | திரு.M.B.கார்த்திக்,<br>த/பெ. மதியழகன்,<br>பாப்பாபட்டி,<br>உசிலம்பட்டி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு **ரூ:6,500/-** |

**<u>அலுவலக குறிப்பு</u> :-**

அ) மேற்கண்ட இனத்திற்கு வரிசை எண்:2-ல் கண்ட **திரு.M.B.கார்த்திக்** என்பவர் மாத வாடகையாக **ரூ:6,500/-** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட கடைக்கு ஏற்கனவே கூடுதலாக வாடகைக்கு குத்தகை எடுத்திருந்ததால், தொடர்ந்து வாடகை செலுத்த இயலாமல் குத்தகைதாரர் கடையினை நகராட்சி வசம்

ஒப்படைத்துவிட்டார். புதிய பேருந்து நிலையம் அருகில் 50 மீட்டர் தூரத்தில் தனியார் இடங்களில் கூடுதல் பரப்பளவில் குறைந்த வாடகைக்கு ஏராளமான தனிநபர் கடைகள் உருவானதால், பேருந்து நிலையத்திற்கு வருகை தரும் பயனிகள் உணவு மற்றும் தேநீர் பயன்பாட்டிற்கு பேருந்து நிலையத்திற்கு வெளியே உள்ள தனியார் கடைகளை பயன்படுத்துகின்றனர். இதனால் பேருந்து நிலைய கடைகளில் வியாபாரம் பெருமளவு குறைந்து விட்டது. மேற்கண்ட கடைக்கு ஏற்கனவே 27-03-2020, 22-05-2020, 09-06-2020, 19-06-2020, 26-06-2020, 17-07-2020, 29-07-2020, 07-08-2020, 19-08-2020 மற்றும் 16-09-2020 தேதிகளில் 10 முறைக்கு மேல் ஏலம் கோரியும் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. எனவே நகராட்சி நிதிநிலையினை கருதி மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 1107 / 2020 / அ-3**

**தீர்மான எண்:** 1539
**தீர்மானம்** : அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 14 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி **கர்னல் ஜான் பென்னிகுவிக் பேருந்து நிலைய அடித்தளப்பகுதி செகண்டரி பிளாக் கடை எண்: 52** குத்தகை விடுவதற்கு 25-09-2020 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திருமதி.S.நிரஞ்சனா, க/பெ. சரவண பிரேம்,8, ஜெய்ராம் நகர்,பழனிச்செட்டிபட்டி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு **ரூ:4,750/-** |
| 2 | திரு.M.B.கார்த்திக், த/பெ. மதியழகன்,பாப்பாபட்டி, உசிலம்பட்டி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு **ரூ:8,000/-** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட இனத்திற்கு வரிசை எண்:2-ல் கண்ட **திரு.M.B.கார்த்திக்** என்பவர் மாத வாடகையாக **ரூ:8,000/-** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்கண்ட கடைக்கு ஏற்கனவே கூடுதலாக வாடகைக்கு குத்தகை எடுத்திருந்ததால், தொடர்ந்து வாடகை செலுத்ததால் நகராட்சியால் கடையினை பூட்டி சீல் வைக்கப்பட்டது. புதிய பேருந்து நிலையம் அருகில் 50 மீட்டர் தூரத்தில் தனியார் இடங்களில் கூடுதல் பரப்பளவில் குறைந்த வாடகைக்கு ஏராளமான தனிநபர் கடைகள் உருவானதால், பேருந்து நிலையத்திற்கு வருகை தரும் பயனிகள் உணவு மற்றும் தேநீர் பயன்பாட்டிற்கு பேருந்து நிலையத்திற்கு வெளியே உள்ள தனியார் கடைகளை பயன்படுத்துகின்றனர். இதனால் பேருந்து நிலைய கடைகளில் வியாபாரம் பெருமளவு குறைந்து விட்டது. மேற்கண்ட கடைக்கு ஏற்கனவே 27-03-2020, 22-05-2020, 09-06-2020, 19-06-2020, 26-06-2020, 17-07-2020, 29-07-2020, 07-08-2020, 19-08-2020 மற்றும் 16-

09-2020 தேதிகளில் 10 முறைக்கு மேல் ஏலம் கோரியும் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. எனவே நகராட்சி நிதிநிலையினை கருதி மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 1107 / 2020 / அ-3**

**தீர்மான எண்:** 1540
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 15 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி **காமராஜர் பேருந்து முனையம் தங்கும் விடுதி கீழ் மேற்கு பக்கம் பார்த்த கடை எண்: 4** குத்தகை விடுவதற்கு 19-08-2020 அன்று பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கலந்துகொண்டவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்கள் பெயர் மற்றும் முகவரி | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாய்) (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| 1 | திருமதி.K.பரமேஸ்வரி,<br>க/பெ. குமார்,<br>11-1-11, இராஜாஜி தெரு,<br>பழனிச்செட்டிபட்டி. | ஏலக்கேள்வி இல்லை | மாதம் ஒன்றுக்கு<br>**ரூ:6,000/-** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட இனத்திற்கு வரிசை எண்:1-ல் கண்ட **திருமதி.K.பரமேஸ்வரி** என்பவர் மாத வாடகையாக **ரூ:6,000/-** உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். காமராஜர் பேருந்து நிலையம் தற்போது பேருந்து முனையமாக செயல்படுவதால் பேருந்துகள் பயனிகளை இறக்கிவிட்டு மட்டும் சென்று விடுவதால் பேருந்து முயைத்தில் உள்ள கடைகளில் வியாபாரம் பெருமளவு குறைந்துள்ளது. அதன் காரணமாக தொடர்ந்து வாடகை செலுத்தாத நிலையில் 28-02-2020 முதல் நகராட்சியால் கையகப்படுத்தப்பட்டது. மேற்கண்ட கடைக்கு ஏற்கனவே 27-03-2020, 22-05-2020, 09-06-2020, 19-06-2020, 26-06-2020, 17-07-2020, 29-07-2020, 07-08-2020, 19-08-2020 மற்றும் 16-09-2020 தேதிகளில் 10 முறைக்கு மேல் ஏலம் கோரியும் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. எனவே நகராட்சி நிதிநிலையினை கருதி வரப்பெற்ற மேற்கண்ட ஒரு ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்: 1107 / 2020 / அ-3**

**தீர்மான எண்:** 1541
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 16 :</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சி கீழ்கண்ட குத்தகை இனங்கள் குத்தகைதாரர்களால் தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து ஒப்படைப்பு செய்யும் காலம் வரையிலான குத்தகை தொகை செலுத்தப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | காலம் |
|---|---|---|---|
| 1 | 125/2014058 | புதிய பேருந்து நிலையம் தரைத்தளம் செகண்டரி பிளாக் கடை எண் : 45 | 30-09-2020 முதல் |

மேற்கண்ட குத்தகை கடையினை நகராட்சி வசம் கையகப்படுத்திடவும், மேலும் புதிதாக பொது ஏலம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u> :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

அ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1542
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 17 :</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சி மேற்கு சந்தை பகுதியில் முன்பொது ஏலம் மூலம் கடைகள் கட்ட அனுமதிக்கப்பட்டு 28-12-2016 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கடை எண்: 27 மற்றும் 29 முறையே திரு.வி.எஸ்.சந்தீப் மற்றும் திரு.சி.விஜயராஜ் ஆகியோர் கோரிய உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஏற்று நகர்மன்ற தீர்மானம் எண்: 68 நாள்: 11-01-2017-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கடைகளுக்கான கட்டுமான பணிகள் மேற்கொண்ட நிலையில், மேற்கண்ட இடம் தொடர்பாக அருள்மிகு கௌமாரியம்மன் கோயில் நிர்வாகத்தால் ஆட்சேபணை செய்யப்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் O.S. No.66/2019 வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் மேற்கு சந்தை F பிளாக் மேற்கு பார்த்த 3வது வரிசையில்

கால்நடை மருத்துவமனை அருகில் வடக்கு மற்றும் தெற்கு பக்கம் பார்த்த அதே அளவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 2 கடைகள் தொடர்ந்து பலமுறை ஏலம் கோரப்பட்டும், எவரும் ஏலம் கோரப்படாமல் உள்ளது.

எனவே நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும், மேலும் அதே அளவுள்ள கடைகள் என்பதை கருத்தில் கொண்டும், திரு.வி.எஸ்.சந்தீப் மற்றும் திரு.சி.விஜயராஜ் ஆகியோர் ஏலம் கோரிய கடை எண்: 27 மற்றும் 29-க்கு மாற்றாக மேற்கு சந்தை F பிளாக் மேற்கு பார்த்த 3வது வரிசையில் கால்நடை மருத்துவமனை அருகில் வடக்கு மற்றும் தெற்கு பக்கம் பார்த்த அதே அளவில் புதிதாக கட்டப்பட்டுள்ள 2 கடைகளை ஒப்படைப்பு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1543

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 18 :**

தேனி - அல்லிநகரம் நகராட்சி கீழ்கண்ட குத்தகை இனங்கள் குத்தகைதாரர்களால் தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து ஒப்படைப்பு செய்யும் காலம் வரையிலான குத்தகை தொகை செலுத்தப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | காலம் |
|---|---|---|---|
| 1 | 125/BD01/00037 | புதிய பேருந்து நிலையம் தரைத்தளம் செகண்டரி பிளாக் கடை எண் : 59 | 30-11-2020 முதல் |
| 2 | 125/BD01/00119 | புதிய பேருந்து நிலையம் தரைத்தளம் செகண்டரி பிளாக் கடை எண் : 60 | 30-11-2020 முதல் |

மேற்கண்ட குத்தகை கடையினை நகராட்சி வசம் கையகப்படுத்திடவும், மேலும் புதிதாக பொது ஏலம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1544

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 19 :

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகத்திற்கு பதிக்கப்பட்டுள்ள பகீர்மானக்குழாய்கள் மற்றும் பம்பிங் மெயின் லைன்களில் ஏற்படுகின்ற கசிவுகள் மற்றும் உடைப்புகளை சரி செய்யும் பணிக்கு 14.08.2020 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.S. மாணிக்கம் ,<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | 695441.00 | 0.03 % குறைவு |
| 2. | திரு. M.தர்மர்<br>நகராட்சி ஒப்பந்ததாரர் | 705132.00 | 1.35 % அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

அ) **மன்றம் அனுமதிக்கலாம்.**

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.03 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு. S. மாணிக்கம் நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1801 / 2020/இ2**

**தீர்மான எண்:** 1545
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 20 :

தேனி-அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பழனிசெட்டிபட்டி தலைமநீரேறுநிலையம் பழைய மற்றும் புதிய குடிநீர் திடத்திலிருந்து 33 வாாடு பகுகளுக்கு சுத்தமான குடிநீர் விநியேகம் செய்ய தேவையான குளோரினேசன் சப்ளை செய்யும் பணிக்கு 14.08.2020 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | Sri Sathya dyes and Chemicals,<br>Andipatti | 353430.00 | 0.43 % குறைவு |

| | | | |
|---|---|---|---|
| 2. | Úaole Chemical Industries, Andipatti | 367200.00 | 3.44 % அதிகம் |

**அலுவலக குறிப்பு :**

அ) **மன்றம் அனுமதிக்கலாம்.**

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.43 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள Sri Sathya dyes and Chemicals, Andipatti அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1800 / 2020/இ2**

**தீர்மான எண்:** 1546
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி – அல்லிநகரம் நகராட்சி